# பாதீட்டு உரை 2016

கிழக்கு மாகாண சபை
திருகோணமலை

**கௌரவ தவிசாளர் அவர்களே,**

கிழக்கு மாகாண சபையின் 2016ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை இன்று இச்சபையின் முன் சமர்ப்பிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

“நல்லாட்சி” என்ற தேசிய அரசின் கொள்கைகளை செயலுருப்படுத்தி, அபிவிருத்தி கொள்கைகளை அதனுடன் இணைந்த போக்குடன் வடிவமைத்து, பெறுபேற்றை நோக்கியதாக தயாரிக்கப்படுகின்ற வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களின் வாயிலாக கிழக்கு மாகாணமானது துரித அபிவிருத்திப் பிரதேசம் என்ற பெருமையுடன் மேலும் முன்னேறி சென்று உயர்மட்ட இலக்குகளை அடைய எத்தனித்துக் கொண்டிருக்கிறது. உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டத்தில் எழும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு எமது மனிதவளத்தினை 2020 ஆம் ஆண்டளவில் உயர் மட்டத்திற்கு கொண்டு வருதல் எனும் தேசிய அரசின் முக்கிய அபிவிருத்தி தந்திரோபாய நோக்கங்களைக் கொண்டே 2016 ஆம் ஆண்டின் எமது வரவு செலவுத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை இச் சபைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதற்கு தேசிய மட்டத்திலான வழிகாட்டல்கள், அனுசரணைகள் என்பவற்றுடன் எமது கடந்தகால நல்லாட்சி, பயனுறுதிமிக்க நிகழ்ச்சித் திட்டங்கள், அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள் என்பன கணிசமான அளவில் பங்களிப்புச் செய்திருந்தமையை நினைவுகூர்வதுடன் எமது மாகாணம் மேலும் சுபீட்சமான நிலையை விரைவில் அடைந்து கொள்ளும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

## *மாகாண அபிவிருத்தி*

‘சமூக சந்தைப் பொருளாதாரம்’ எனும் எண்ணக்கருவினை கடைப்பிடித்து எமது மக்களின் தலாவருமானத்தை அதிகரிப்பதோடு மக்களிடையே காணப்படும் வருமான சமமின்மையை குறைப்பதற்கான அரச கொள்கைகளில் அதிக கவனம் எடுக்கும் தேசிய அரசின் செயற்திட்டங்களுக்கு இணைவாக எமது கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நல்லாட்சிக்கான அரசின் புதிய பயணத்தின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் பல துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து வருவதனையிட்டு நாம் பெருமிதம் அடைகிறோம்.

எமது மாகாணம் உள்ளூர் மட்டத்தில் துரித வேகத்தில் விருத்தியடைந்து வருவதுடன் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் கணிசமான பங்களிப்பையும் வழங்கி வருகிறது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.3 வீத பங்களிப்பினை செலுத்தி மாகாண ரீதியில் முன்னேறியிருக்கின்றது. அதேநேரம், மாகாண மட்டத்திலான சமூக பொருளாதார குறிகாட்டிகளும் தேசிய குறிகாட்டிகளுக்கு அண்மித்த வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன.

நிலைபேறு அபிவிருத்தி குறிக்கோள்களை வெற்றிகரமான முறையில் அடைந்து கொள்வதற்காக திட்டமிட்டு, எமது மாகாணத்தின் பிரத்தியேக தேவைகள், வளங்கள், ஆற்றல்கள் என்பவற்றை சிறந்த முறையில் உள்வாங்கி, கிழக்கு மாகாண அபிவிருத்திச் செயற்பாடுகள் உத்வேகத்துடன் செயற்படுத்தப்பட்டு வந்தமை இதற்கு முக்கிய காரணமாகும். அத்துடன் இப்பெறுபேறுகளை அடைவதற்கு பல்வேறு வழிகளில் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகின்ற கௌரவ ஆளுநர், கௌரவ மாகாண சபை அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள், மற்றும் எமது உத்தியோகத்தர்களின் பங்களிப்பினை நினைவுகூர்வதுடன் எதிர்வரும் ஆண்டுகளிலும் இவை மேலும் வலுப்பெறும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

## *நிதி ஒதுக்கீடு*

**கௌரவ தவிசாளர் அவர்களே,**

எமது மாகாணத்தின் அபிவிருத்திப் போக்குகளை நுட்பமாக அவதானித்த மத்திய அரசு 2016 ஆம் ஆண்டின் மூலதனச் செலவிற்கான நிதியினை இரட்டிப்பாக வழங்க தீர்மானித்துள்ளமை என்பது எமது மாகாணம் ஓர் சிறந்த அபிவிருத்திப் பாதையில் பயணிக்கின்றது என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த அடிப்படையில் 2016 ஆம் ஆண்டிற்காக நிதி ஆணைக்குழுவினால் கிழக்கு மாகாண சபைக்கு மூலதனச் செலவினங்களிற்கென 4732 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த மூலதனச் செலவில் 969 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதியளிப்புகளுடனான விஷேட கருத்திட்டங்களின் அமுலாக்கத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றது. 2015 நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் எமது மாகாண சபைக்கான மூலதனக் கொடை 65 வீதத்தால் அதாவது 1863 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை மீண்டெழும் செலவினங்களிற்கென 16,511 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீண்டெழும் செலவினங்களுக்கான நிதியீட்டமாக மத்திய அரசின் மானியம் 13,741 மில்லியன் ரூபாவும் அரச வருமான சேகரிப்பு 2,770 மில்லியன் ரூபாவும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்த மூலதனச் செலவில் 62 வீதம் கல்வி, சுகாதாரம் போன்ற சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் 23 வீதம் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் 04 வீதம் உள்ளூராட்சி சேவைகளிலும் முதலீடு செய்யப்படவுள்ளதுடன் மாகாண நிர்வாக நிறுவன மேம்பாட்டிற்கு 10 வீதமான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வருடம் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற சமமான பிராந்திய அபிவிருத்தியினை நிலைநிறுத்தும் நோக்குடன் சிறிய கைத்தொழில் பேட்டைகள் அமைக்கும் திட்டத்தின் தொடர் வேலைகளிற்காக 2016 ஆம் ஆண்டில் 48 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அடுத்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக 105 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான வேலைத்திட்டங்கள் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலும், அபிவிருத்திச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் செயற்திட்டங்களுக்காக 105 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டை மக்களிற்கு பயனுள்ள வகையில் பொருத்தமான வேலைத்திட்டங்களை தெரிவு செய்து மாகாண அபிவிருத்திக்கு மேலும் வலுச்சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்தோடு கௌரவ மாகாணசபை உறுப்பினர்களின் வசதி கருதியும் இலகுவான ஒருங்கிணைப்பை நோக்காகவும் கொண்டு 2016 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் பேரவைச் செயலகத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

பொது நிதியின் வினைத்திறனான முதலீட்டினை உறுதிப்படுத்தும் நோக்குடன் மத்திய திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பூச்சியப் பாதீட்டு அணுகுமுறைக்கு அமைவாகவும், கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்தி கொள்கைகளிற்கு அமைவாகவும் அபிவிருத்தி முதலீடுகளும் அவற்றின் நன்மைகளும் அனைத்து பிரதேசங்களிலும் சகல இன மக்களையும் சென்றடைவதை உறுதி செய்து கொள்வது எமது கடமையாகும். அதே நேரம்

அனைத்து துறைகளிலும் சகல செயற்பாடுகளிலும் பிராந்திய, இன ரீதியான சமநிலை தொடர்ந்து பேணப்படுவதுடன் இனங்காணப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவதையும் நாம் உறுதி செய்து கொள்வதோடு, அபிவிருத்தியை மேலும் விரைவுபடுத்தும் பொருட்டு பொருத்தமான துறைகளில் அரச, தனியார் துறை பங்குபற்றுதலினூடாக வினைத்திறனான திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்களிற்கு பயன்மிக்க பெறுபேறுகள் கிடைக்கப்பெறுவது தொடர்பான ஒழுங்கமைப்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## *சமூக உட்கட்டமைப்பு வசதிகளும் சேவைகளும்*

**கௌரவ தவிசாளர் அவர்களே,**

சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது நாட்டின் அபிவிருத்தியிலும் மனிதவள மேம்பாட்டிலும் பெரும் பங்கினை பெற்ற முக்கிய துறைகளாக விளங்குகின்றது. கிழக்கு மாகாண சபை கட்டமைப்பிலும் அதன் நிதி, நிர்வாக, அபிவிருத்தி செயற்பாடுகளிலும் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சிறுவர் பராமரிப்பு, சமூகசேவை, வீடமைப்பு, மத மற்றும் கலாசார விவகாரங்கள் போன்ற உபதுறைகளை உள்ளடக்கிய சமூக உட்கட்டமைப்பு வசதிகள், சேவைகள் என்ற வகுதியே பெரும்பங்கினை கொண்டுள்ளது. இத்துறைகளின் கீழ் வரும் விஷேட கருத்திட்டங்களையும் ஏனைய உபதுறைகளையும் உள்ளடக்கிய வகையில் சமூக உட்கட்டமைப்பு வசதிகளிற்கும் சேவைகளிற்குமென 2,949 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக மாகாண திணைக்களங்களிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

அது மாத்திரமன்றி கல்வி, சுகாதாரம் ஆகிய இரு துறைகளின் அபிவிருத்தி முதலீடு என்பது தனியே மூலதன செலவினமாக மட்டுமன்றி பெரும்பகுதி சேவைகள் வழங்கல் என்ற வகையில் மீண்டெழும் செலவினங்களையும் உள்ளடக்கியதாக அமைகின்றது.

கல்விக்காக 2016 ஆம் ஆண்டிற்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையில் 1080 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு உதவியின் கீழ் 495 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி

பாடசாலை மட்டத்தில் சுகாதாரம், விளையாட்டு, தகவல் தொழிநுட்பம், கற்பித்தல் திறன் மற்றும் கல்வி முகாமைத்துவம் என்பவற்றிலும் உரிய அளவுகளில் கவனம் செலுத்தி ஒருங்கிணைந்த அபிவிருத்தியினை அடையும் வகையில் கல்வித்துறை நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

அதேநேரம் சுகாதார மற்றும் சுதேச வைத்திய துறை அபிவிருத்திக்கு 815 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு உதவியின் கீழ் 380 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சுகாதார துறையின் குறிகாட்டிகள் தேசிய மட்டத்துடன் ஒப்பிடுமளவிற்கு மிகச்சிறப்பாக காணப்படுகின்றது. மேலும் எமது மக்களிற்கு தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கும் ஆரோக்கியமான சமூகத்தை நிலைநிறுத்தவும் நிறுவன ரீதியான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி சுகாதார சேவைகளை விஸ்தரிப்பதனூடாக பொருத்தமான நடவடிக்கைகள் நிகழ்ச்சிதிட்டங்களில் உள்வாங்கப்படும்.

எனவே, உயர்தர சுகாதார வசதிகள், சேவைகள் சகல மக்களிற்கும் இடையூறின்றி வழங்கப்படுவதை இலக்காகக்கொண்டு மேலைத்தேய மற்றும் சுதேச மருத்துவ துறைகளிடையே சிறந்த இணைப்புத்தன்மையை பேணி நிகழ்ச்சிதிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் சுகாதார சேவை வழங்கலில் தனியார் துறையின் பங்களிப்பு ஊக்குவிக்கப்படும்.

சமூக பாதுகாப்பு மற்றும் நலிவுற்றோர் நலன்புரி நடவடிக்கைகள் என்பன சமூக சேவை செயற்திட்டங்களினூடாகவும் நலச்சேவை வசதிகளினூடாகவும் சிறந்த முறையில் வடிவமைத்து செயற்படுத்தப்பட்டு வருவதுடன் இதற்காக 26 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு உதவியின் கீழ் 95 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வறே விளையாட்டுதுறை மேம்பாட்டினூடாக ஆரோக்கியத்தையும் நற்பண்புகளையும் விருத்தி செய்து ஒழுக்கமுடைய பிரஜைகளையும் ஆரோக்கியமான சமூகத்தினையும் உருவாக்குவதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். இதற்காக 2016ம் ஆண்டின் மூலதனச் செலவினமாக 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் சிறுவர் பராமரிப்பு, மத கலாசாரச் விடயங்கள் மற்றும் வீடமைப்பு துறைகளுக்காக முறையே 21 மில்லியன், 8 மில்லியன், 9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படவுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

## *பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்*

**கௌரவ தவிசாளர் அவர்களே!**

எமது மாகாணத்தின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி நிலைபேறு அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பல்வேறு நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கடந்த வருடங்களில் எமது மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலும் சிறிய பெரிய அளவிலான பொருளாதார உட்கட்டமைப்பு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபையினாலும் தேசிய நிறுவனங்களினாலும் நடைமுறைப்படுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் மாகாண, கிராமிய வீதிகள் மற்றும் இணைந்த வீதி வலையமைப்பு போன்றன மேம்படுத்தப்பட்டிருப்பதுடன் கிழக்கு மாகாணத்தில் வினைத்திறன் மிக்க போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதோடு, மாகாணத்திற்கு வெளியேயான போக்குவரத்து வசதியிலும் பெரும் முன்னேற்றகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதுமாத்திரமின்றி விவசாய, மீன்பிடி மற்றும் கால்நடை துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதேபோல் பொருளாதார உட்கட்டமைப்புத் துறை வளர்ச்சியில் அதிகமாக பங்கெடுக்கும் துறைகளான சுற்றுலா, கிராமிய மின்சாரம், நீர்வழங்கல், தொலைத்தொடர்பு மற்றும் நீர் விநியோகம் போன்ற மிக முக்கிய துறைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன என்பதையும் இச்சபைக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

இத்தகைய உட்கட்டுமான அபிவிருத்திகள் பிராந்திய சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோலியதுடன் அதன் பலாபலன்களை எமது மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். எனவேதான், 2016 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவிற்கான ஒதுக்கீட்டில் எமது மாகாணத்தின் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 1068 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு மேலும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படும். இதன்படி, மாகாண வீதிகளை மேம்படுத்தவும் புனரமைக்கவும் என 371 மில்லியன் ரூபாவும் போக்குவரத்து வசதிகளை தரமிக்கதாக மாற்றி மக்களின் அன்றாட போக்குவரத்து தேவைகளை சிறப்பாக உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டு 16 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு அதற்கமைய நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

பொருளாதார கட்டமைப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள விவசாயத்துறை, கால்நடை மற்றும் மீன்பிடி போன்ற உற்பத்தி மேம்பாட்டுத் துறைகளுக்காகவும் நீர்

விநியோத்திற்கெனவும் மொத்தமாக 446 மில்லியன் ரூபா மாகாண குறித்து ஒதுக்கப்படும் நிதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு கிராமிய அபிவிருத்தித் துறைக்கென 30 மில்லியன் ரூபாவும் இந்நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விவசாயம், கைத்தொழில் போன்ற உற்பத்தித் துறைகளை மேலும் விருத்தி செய்வதற்கும் இத்துறையிலுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்குமான உபாயங்களை வகுத்து பொருத்தமான நடவடிக்கைகள் எமது நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்படும். இத்துறைகளில் பெரும்பாலும் ஜீவனோபாய தொழில்களாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பொருளாதார அணுகுமுறையுடன் பயன்மிக்க வாணிப முயற்சிகளாக மாற்றம் பெற வேண்டும். எமது மாகாண உற்பத்திகளிற்கு பெறுமதி சேர் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தி வியாபார ரீதியான முயற்சிகளை ஊக்குவிப்பதிலும் சந்தைப்படுத்தல் பொறிமுறையை வலுப்படுத்துவதிலும் விஷேட கவனம் செலுத்தவுள்ளோம்.

சுற்றுலாத்துறை இன்னுமொரு மிக முக்கிய துறையாகக் கருதப்பட்டு சுற்றுலா பயணிகளைக் கவரக்கூடியதும் அவர்களுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதுமான செயற்றிட்டங்களை உருவாக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள 60 மில்லியன் ரூபாவை பயன்படுத்தி இத்துறையினை மேம்படுத்தும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்துவதன் ஊடாக வேலைவாய்ப்புக்களை அதிகரித்து மக்களின் வருமானத்தை அதிகரித்து வறுமையை ஒழிக்கும் நோக்கோடு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

எமது மாகாணத்தின் உள்ளூர் வளங்கள், மக்களின் தொழிற்திறன் ஆற்றல்கள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பவற்றை மையப்படுத்தி புதிய நுட்பங்களுடன் சிறு கைத்தொழில் துறையினை விருத்தி செய்வதன் மூலம் உள்ளூர் வளங்களை சரியான வகையில் பயன்படுத்தி கிராமிய வேலைவாய்ப்புகளை அதிகரித்து வறிய மக்களிற்கு நிலையான குடும்ப வருமானத்தினை உருவாக்கிக் கொடுக்கும் வகையில் நிகழ்சித்திட்டங்களை உருவாக்கி செயற்படுத்த வேண்டும். இதற்காக 2016 ஆம் ஆண்டுக்கான மூலதன செலவிற்கான ஒதுக்கீட்டு தொகையில்

சிறுகைத்தொழில் துறைக்கு 26 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் புதிய பல செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு மேலாக பொருளாதார உட்கட்டமைப்பு திட்டங்களில் மாகாணத்தின் மீண்டெழும் செலவுகளுக்கான ஒதுக்கீட்டிலிருந்தும், மத்திய அரசினதும் வெளிநாட்டு நிதியுதவியுடனான செயற்திட்டங்களிலிருந்தும் பெருமளவு முதலீடுகள் உள்வாங்கப்படுகின்றன. அடுத்துவரும் ஆண்டுகளில் அவ்வாறான அபிவிருத்தி முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதிலும் பயன்மிக்க திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்வதிலும் தீவிர கவனம் செலுத்துவோம். அதேநேரம் அபிவிருத்திக்கென கிடைக்கின்ற மாகாண நிதியினை பயன்படுத்துவதில் பரந்துபட்ட வகையில் முன்னரிமைத் தெரிவுகளுடன் கூடிய சிறந்த நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரித்து மக்கள் மேலும் பயனுறும் வகையில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

## உள்ளூராட்சி சேவைகள்

எமது மாகாண சபைக் கட்டமைப்பின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக உள்ளூராட்சி வீதிகள், கிராமிய நீர் வழங்கல் போன்ற கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளும், திண்மக்கழிவு முகாமைத்துவம் போன்ற உள்ளூராட்சி சேவைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி அபிவிருத்திக்கும் சமுதாய சேவைக்காகவும் 2016 ஆம் ஆண்டிற்கான மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 240 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இது வறுமைக் குறிகாட்டிகளின் அடிப்படையில் பரந்துபட்ட வகையில் அடையாளங்காணப்பட்ட மிக வறிய கிராமங்களில் சிறியளவிலான சமூக உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தும் வகையில் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி மட்டத்திலும் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திக் கொடுத்து பொருளாதாரத்தை முன்னேற்றும் நோக்குடன் உள்ளூராட்சி வீதிகளை நிர்மானிப்பதற்காகவும் புனரமைப்பதற்காகவும் என மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதியில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. அதே நேரம் சமூக நீர் வழங்கல் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டம் என்பவற்றிக்காக தலா 55 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## விஷேட செயற்திட்டங்கள்

**கௌரவ தவிசாளர் அவர்களே,**

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு எமது மாகாண சபை நிதியீட்டத்துடனான நிகழ்ச்சி திட்டங்களிற்கு மேலதிகமாக மத்திய அரச நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் எமது மாகாண நோக்குடன் ஒன்றிணைந்தமையாக தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்ற அதே வேளை மாகாண சபை நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியுதவியுடனான விஷேட கருத்திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது என நான் நம்புகின்றேன்.

அண்மைக்காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வெளிநாட்டு நிதியுதவியுடனான விஷேட திட்டங்களில் அநேகமானவை இவ்வாண்டில் முடிவுறுத்தப்பட்டுள்ளமையால் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது அடுத்த வருடத்திற்கான விஷேட கருத்திட்டங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. புதிய கருத்திட்டங்கள் மற்றும் வருமானத்தை உழைக்கக் கூடிய நிறுவனங்களை உருவாக்கி செயற்படுத்துதல் என்பவற்றிற்கான நிதியீட்டங்களை தேடிப்பெறவேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது.

இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் ($2^{nd}$ HSDP) 2016 ஆம் ஆண்டில் 365 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பதனையும் தற்போது உலக வங்கி, அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கும் பாடசாலைக் கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கென 495 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிதியுதவியுடன் அடிப்படை சமூகசேவை உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்திற்கென 95 மில்லியன் ரூபாவும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர்களுக்கான அவசர நிதியத்தின் (UNICEF) கீழ் 15 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்களே!**

கிழக்கு மாகாண சபைக்கென 2016 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இவ் வரவு செலவுத் திட்டத்தினூடாக கிழக்கு மாகாண

மக்களின் வளர்ச்சி, நலன் என்பவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு சிறந்த நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு கௌரவ அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரினதும் பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டிக்கொண்டு இவ்வுரையை செவிமடுத்த தங்கள் எல்லோருக்கும் நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

**நன்றி**